1974 ஏப்ரல் 17]

Thirupathisaram Agricultural School

* 847 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to increase the number of students in the Agricultural School at Thirupathisaram in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) இவ்விஞவிற்கு இடமில்லை.

விதைகள் வழங்கல்.

* 848 விஞ—**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்குத் தேவைப்படும் பொறுக்கு விதைகளை அரசு அதிகாரிகளின் பொறுப்பிலேயே அரசுப் பண்ணைகளிலேயே தயாரித்து வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இந்த மாநிலத்தின் மொத்தத் தேவையில் ஏறத்தாழ 10 சதவீதம் தான் அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தியாகிறது. மற்றவை அரசு அலுவலர்களின் மேற்பார்வையில் தனியார்களால் உற்பத்தி செய்யப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மொத்தத் தேவையில் 10 சதவீதம் தான் அரசாங்கப் பண்ணைகளில் உற்பத்தியாவதாக அமைச்சரவர்கள் சொன்ஞர்கள். மீதி 90 சதவீதம் அரசு அதிகாரிகளின் மேற்பார்வையில் தனியாரிடமிருந்து பெறப்படுவதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். என்னதான் மேற்பார்வை செய்தாலும், தனியார்கள் லாப நோக்கத்தோடு பல விதைகளில் கலப்படம் செய்து கொடுத்து விடுகிருர்கள். அதை வாங்கி உபயோகிக்கும் விவசாயிகள் மிகுந்த நஷ்டத்திற்கு